**பிரதான விடயங்களடங்கிய ஆவணம் (KFD) நிலையான வைப்பின் மீதான கடன்கள்**
**மேர்சன்ட் பேங்க் ஒ.ஃப் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**

**இதன் முக்கிய அம்சங்களும் நன்மைகளும்:**

**நிலையான வைப்பின் மீதான கடன்கள்**: பணத்தை திரும்பப் பெறுவதற்கான கடன் (இது எந்தவொரு நிலையான வைப்பின் மீதும் பெற்றுக் கொள்ளக்கூடிய உடனடி கடனாகும்.)

**தகைமைகள்**: நிலையான வைப்பைக் கொண்ட எவரேனுமொரு வைப்பாளர்

**நிலையான வைப்பின் மீதான கடன்களின் இயல்புகள்**

- பணம் வைப்புச் செய்யப்பட்ட திகதிக்கு அடுத்த தினத்திலிருந்து கடன் பெறலாம்.
- இலகுவான மீளச் செலுத்தும் திட்டம்: வாடிக்கையாளர்களுக்கு இலகுவாக வட்டி அல்லது முதலினை மீளச் செலுத்தும் வசதி.
- குறைந்தபட்ச ஆவணங்கள்
- எந்தவித பிரச்சினைகளுமின்றி கடன் வழங்கப்படும்.
- மிகக் குறுகிய காலத்தில் கடனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**வட்டி வீதம்:** வைப்பின் வீதத்தினைவிட 3.50% இனால் அதிகமாகும்.

: ஒரு கடன் வசதிக்கான ஆவணங்களது கட்டணம் ரூ.1000/=

**பிரதான விதிமுறைகளும் நிபந்தனைகளும்**

- முதிர்ச்சியடையும் நிலையான வைப்பிற்குரிய தொகையில் ஆகக்கூடியது 80% தொகையைக் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம்.
  (நிபந்தனைகள் உண்டு)

- மாதாந்த வட்டியுடன்கூடிய நிலையான வைப்பிற்கு உரிய தொகையில் ஆகக்கூடுதலாக 75% தொகையைக் கடனாகப் பெற்றுக்கொள்ள முடியும். (நிபந்தனைகள் உண்டு)

**தேவையான ஆவணங்கள்**

- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம்
- கடனைச் செலுத்துவதாக வழங்கப்படுகின்ற ஆவணம்
- வைப்புச் சான்றிதழின் மூலப்பிரதி

**சட்டரீதியான ஏற்பாடுகள்**

இதற்குரிய சட்டரீதியான ஏற்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- ஒப்பந்தச் சட்டம்
- இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட கட்டளைகள் மற்றும் சுற்றறிக்கைகள்

**முறைப்பாடுகளை கையாளும் நடைமுறைகள்**

எமது வைப்புக் கடன் சாதனங்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் வாடிக்கையாளர்கள் தமது முறைப்பாடுகளை கீழே காட்டப்பட்டுள்ள விதத்தில் முன்வைக்கலாம்.

அ) அருகிலுள்ள கிளைக்குச் சென்று கிளை முகாமையாளரிடம் தமது முறைப்பாடுகளைச் செய்யலாம்.

ஆ) எமது உடனடி தொலைபேசி இலக்கமான 011 – 4711711 இற்கு அழைக்கலாம். (முறைப்பாடுகள் கிடைத்ததன் பின்னர் அதனை ஏற்றுக்கொண்டு அது தொடர்பில் உடனடியாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் வாடிக்கையாளர் அறிவுறுத்தப்படுவார்.)

இ) திரு.ஜுட் கம்லத் - பிரதிப் பொது முகாமையாளர், சந்தைப்படுத்தல் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி – வாடிக்கையாளர் முறைப்பாடுகள் தொடர்பில் செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

**"சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வரம்புக்கு மேலான கொடுக்கல் வாங்கல்கள் (1 மில்லியனுக்கு மேல்) நிதிப் புலனாய்வுப் பிரிவிற்கு அறிக்கையிடப்படும்."**